RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt22s98

OPEN ACCESS

சங்க இலக்கியங்களில் நீரின் பயன்பாடு

மா. முரளி [அ, *]

[அ] தமிழ்த்துறை, காமராஜ் கல்லூரி, தூத்துக்குடி-628003, தமிழ்நாடு, இந்தியா.

Use of Water in Sangam Literature

M. Murali [a, *]

[a] Department of Tamil, Kamaraj college, Thoothukudi-628003, Tamil Nadu, India

* Corresponding Author: muralidev1980@gmail.com

Received : 23-07-2021
Revised : 01-06-2022
Accepted : 14-06-2022
Published : 27-07-2022

Check for updates

ABSTRACT

It is known from the literature that the Tamil people of the Sangam period were attached to nature and used the energies of nature as needed. Reservoirs like lake embankments have been constructed to store the seasonal rainwater and have been well maintained. Water is distributed through canals, sluices, and canals. Earth, water, fire, air, and space are all mixed up in the world of enchantment, which is the worldly natural theory discovered by the Tamils. Although the world is surrounded by water, it is the source of food and production. The brief of the study is to make the present generation aware of water conservation by knowing the thoughts about water in the literature and how it has been praised and protected.

Keywords: Lake, Dam, Canal, Sangam Literature

முன்னுரை

இயற்கையான புவியமைப்புகளின் பால் ஒத்தியைபு காண்பதற்கான அக்கறை சங்கத் தமிழர்களிடம் வெளிப்படையாகக் காணப்பட்டது. அவர்கள் இயற்கையின் படைப்புகளைச் சரியான புரிதல்களோடு அணுகினர். இதற்குச் சங்க இலக்கியப் பாக்கள் சான்று பகிர்கின்றன. அம்மக்களின் வாழ்வியல் படிப்பினைகள் அனைத்தும் இயற்கையால் கற்பிக்கப்பட்டவை. இயற்கையைப் பாதுகாத்தல், பயன்படுத்துதல் போன்ற அனைத்து நிலைகளிலும் திறன் வாய்ந்தவர்களாக இருந்தனர் (Subramaniyan, 2007). நீரின்றி அமையாது உலகு எனும் வள்ளுவனின் வாக்கின் மூலம் நீரின் முக்கியத்துவத்தை அறிய முடிகிறது. இயற்கை உலகுக்கு அளித்த பெரிய கொடை நீராகும். இத்தகைய நீரானது பல நீர் நிலைகளை கடந்து கடலை அடைகிறது. அவ்வகையில் இக்காலச் சூழ்நிலையில் பெரும் சவாலாகத் திகழும் நீரினைப் பாதுகாக்கச் சங்ககால மக்கள் கையாண்ட உத்திகளையும் முறைகளையும் அறிவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

நீர் நிர்வாகம்

இயற்கை அளிக்கும் கொடை மழை நீரை வீணாக்காமல் சிக்கனமாகப் பயன்படுத்தவும், குறைந்த நீர் செலவில் நிறைந்த வசதிகளைப் பெருக்குவதுமாகிய ஆய்வுகளில் ஈடுபட்டுள்ள அறிவியல் துறையே 'நீர் வள நிர்வாகம்' ஆகும்.

"மனைத்தக்க மாண்புடையாள் ஆகித்தற் கொண்டான்

வளத் தக்காள் வாழ்க்கைத் துணை"

என்ற குறட்பா நிர்வாகச் சிந்தனையை எடுத்தியம்புகிறது. குடித்தனத்திற்கு ஒத்த பெருமை உடையவளும், தன்னுடைய கணவனுடைய வருவாய்க்குத் தக்கபடி செலவு செய்கின்றவளுமான மனைவியே சரியான வாழ்க்கைத் துணையாகிறாள் என்பது பொருளாகிறது (Kumaravelan, 2003).

ஏரி

பூமியின் மேற்பரப்பில் பல்வேறு காலக்கட்டங்களில் பல்வேறு காரணங்களால் பெரிதும் சிறியதுமான பள்ளங்கள் ஏற்பட்டு அதில் மழைநீரோ பனிநீரோ ஆற்று நீரோ நீரோடையோ கலப்பதனால் வற்றும் அல்லது வற்றாத நீர் நிலைகளாக அவைகள் அமைந்துவிடுகின்றன. இவைகளே ஏரிகள் என ஏரிக் குறித்துக் கூறுகின்றார் (Sampath, 2004).

ஏரியின் அமைப்பு

மழைப்பொழிவை தேக்கி வைக்கும் ஏரிகளின் வடிவம் அமைப்பை சங்க இலக்கியம் குறிப்பிடுகிறது.

"அறையும் பொறையும் மணத்த தலைய

எண்நாள் திங்கள் அனைய கொடுங்கரைத்

தெண்ணீர் சிறுகுளம் தீள்வது மாதோ"

ஏரிகளானது எட்டாம் பிறை வடிவில் ஏரி இருக்க வேண்டும் அவ்வாறு இருந்தால் அதன் கொள்ளளவு அதிக நீரைத் தாங்கிச் சிக்கனமான வடிவமைப்பிற்கு உகந்ததாகும் என்று புறம் குறிப்பிடுகின்றது (Subramaniyan, 2010).

அணை

நீரோடும் பாதைகளின் குறுக்காக நீரோட்டத்தின் வேகத்தைக் கட்டுப்படுத்தி நிலத்தடி நீரை உயர்த்தவும் மண்ணரிப்பைத் தடுக்கவும் எழுப்பப்படும் சிறுசிறு தடைச் சுவர்கள் கொண்ட அமைப்பு என அணை குறித்துக் கூறுகின்றார் (Sampath, 2004).

பெருக்கெடுத்து மிகுந்த வேகத்தில் வரும் நீரினைத்தடுத்து நிறுத்தி குறுக்கே கற்களால் தடுப்பணையை கட்டுதலாகும். அதனை கற்சிறை என்றழைத்தனர். தொல்காப்பியர் பெருகி வரும் படைவீரனை வீரன் தடுத்து நிறுத்தி போரிடுவது போல ஆற்று நீரை தடுத்து நிறுத்துதல் என்று கூறுகின்றார்.

"வருவிசை புனரைக் கற்சிறை போல

ஒருவன் தாங்கிய பெருமையானும்" (Elampuranar, 2004)

"காவிரிக்குக் மீனாவின் கல்லணை கட்டினான் என்பாற்கு,

நுரைத்தலைத் குறைப்புனல் வரைப்படும்புகுதெனும்

புனலாடு மகளிர் கதுமெனக் குடைய"

வாய்க்கால் வழியாக ஓடுகின்ற நீரைத் தேவைப்படும் இடங்களில் வாய்க்கால்களின் குறுக்கே சிறு தடுப்புகளை (அணை) ஏற்படுத்தி, நீர்ப் பாய்ச்சுகின்ற போக்கை அகநானூறு மிக அழகாகச் சித்தரிக்கிறது (Saminathan, 2001). உழவர்கள் நெற்பயிரை உடைய தம் வயல்களில் காஞ்சி மரத்தின் சிறு துண்டுகளை நட்டு, இனிய சுவைமிக்க கரும்பின் சிறந்த பல கழிகளைக் குறுக்கே நெருக்கமாக வைத்து அடைத்து அணையாகக் கோலி, அப்பள்ளங்களில் நீரைத் தேக்கிப் பாய்ச்சுவர். இக்காட்சி அகநானூற்றில் அழகுறக் காட்டப்பட்டுள்ளது.

"கலிமகிழ் உழவர்

காஞ்சி அம் குறுந்தறி குத்தி, தீம்சுவை

மென்கழைக் கரும்பின் நன்பலமிடைந்து

பெருஞ்செய் நெல்லின் பாசவல் பொத்து

வருத்திக் கொண்ட வல்வாய்க் கொடுஞ்சிறை

மீது அழி சுடுநீர் நோக்கி...." (Saminathan, 2001)

வாய்க்கால்களின் நடுவே சிறு தடுப்பு அணைகளை உண்டாக்கி நீர் பாய்ச்சுகின்ற பழந்தமிழர்களின் அறிவுத் திறத்தோடு, வாய்க்கால்களின் தடுப்பு மதகுகளை ஏற்படுத்தி தரும் அரசாங்கத்தின் செயற்பாட்டை ஒப்பிடத் தோன்றுகிறது. நீரோட்டத்தின் குறுக்கே அணைகள் கட்டப்பட்டு மதகுக் கதவுகள் இடப்பட்டிருந்தையும் கதவில் நீர்க்கசிவின் கால்களில் நெய்தல் பூக்கள் பூத்திருந்ததையும் அம்மலர்களில் வண்டுகள் மொய்த்திருந்ததையும், அவ்வழியே செல்லும் வண்டுகளின் சக்கரங்கள் சேற்றில் பதிந்ததையும்,

"பொய்கை வாயில் புணல்பொரு புதவின்

நெய்தல் மரபின் நிரைகட் செறுவின்

வல்வாய் உருளி கதுமென மண்ட"

என்னும் பாடலடிகள் விளக்குகின்றன. இத்தகைய காவல் மிகுந்தும், முறைப்படி நீரைச் சேமித்துச் சிறப்பாகத் திட்டமிட்டுச் செலவு செய்ய ஏற்பாடுகள் செய்யப்பட்டதால் விளைநிலங்கள் செழித்து சிறப்புற்று இருந்தன (Saminathan, 2001).

நீர் வெளியேற்றும் அமைப்புகள்

நீர்த்தேக்கங்களில் சேமித்து வைத்த நீரினை மக்களின் தேவைகளுக்காக மதகு மடை பதவு குமிழி போன்ற அமைப்புக்கள் மூலம் குளங்கள் ஏரிகள் கால்வாய்கள் வழியாக அமைத்துள்ளனர்.

பதவு

பதவு என்பதற்கு கதவு என்று பொருள்படும். நீர் வெளியேறும் சிறிய கதவு இது ஏரிகள் மற்றும் குளங்களில் அமைத்துள்ளது.

'புனலம் பதவின் மிழலை யோடு'

'புனல்பொரு பதவின் உறந்தை எய்தினும்'

என்ற வரிகள் பதவு பற்றியச் செய்திகளைத் தருகின்றது (Saminathan, 2001).

மடை

மடை என்பது நீரின் போக்கைக் கட்டுப்படுத்த கட்டப்படும் அமைப்பு. கன்னிவாய்க்காலில் செல்லும் தண்ணீரை முன்பக்கம் அடைத்து வயலுக்குத் திருப்பிவிடும் ஏற்பாட்டை மடை மாறுதல் என்று கொடுமுடி சண்முகம் கூறுகிறார்.

மடையும் அடைத்து தூம்பும் செய்வித்தான் என்பது கல்வெட்டு வழக்கு. சங்ககால மக்கள் நீரினை வெளியேற்றுவதற்கு இம்முறையைப் பயன்படுத்திப் பாசனத்திற்காகவும் வெள்ளம் ஏற்படும் போது நீரைத் திறந்து விட்டதையும் அறியமுடிகிறது.

"வையை உடைத்து மடை அடைத்த கண்ணும்'

படை மாண் பெருங்குளம் மடை நீர் விட்டென"

'வையை நினக்கு மடை வாய்த்தன்று'

என்ற வரிகள் மடையைப் பற்றிப் பரிபாடல் குறிப்பிடுகிறது (Saminathan, 2001). குளங்களில் மட்டுமல்லாமல் ஆற்றுக் கால்வாய்களிலும் இவ்வமைப்பு இருப்பதை அறியலாம்.

குமிழி

குளம் கால்வாய் தனியாக வரும்பொழுது மண்ணும் சேர்ந்துவரும். அங்ஙனம் நீரினையும் மண்ணையும் பிரித்தெடுத்து பாசனத்திற்காக நீர் பங்கீடு செய்வது குமிழியாகும்.

‘வனை கலத்திகிரியின் குமிழி சுழலும்

துனைசெலல் தலைவாய் ஓவுஇறந்து வரிக்கும்

காணுநர் வாயஅம் கட்குஇன் சேயாற்றின்’

என்ற வரிகள் குயவனின் மட்கலத்தினைப் போல குமிழி சுழல்கின்றது என்று குறிப்பிடுகிறார் (Saminathan, 2001). குமிழியின் வாயை மரத்தால் ஆன சக்கையால் அடைத்து நீர் வெளியேறுவதைத் தடுக்கலாம்.

தூம்பு

தூம்பு என்பது மூங்கிலை இழுத்து குழல் போன்று செய்யப்பட்ட கருவியாகும். இது யானையின் துதிக்கை போன்று இருக்கும். நீண்ட குழாய் போன்று இருக்கும். தூம்பு என்ற சொல் ஏரி மற்றும் குளங்களிலுள்ள நீரினைத் தேவைக்கேற்ப அளக்கும் அளவீடு ஆகும். குமிழியில் ஒரு துளை போடப்பட்டிருக்கும், பக்கவாட்டில் இரண்டு துளைகள் இருக்கும். அதன் மேல் மூடியிருக்கும். கல்லுக்கு தூம்புக்கல் என்று பெயர். கம்பி மூலம் இணைத்திருப்பர். கம்பியை மேலே தூக்கினால் நீரானது துளையின் வழியாக குளங்களை நிரப்பும்.

“பெருங்குள மருங்கில் கருங்கைச் சிறுவழி

இரும்பெரு நீத்தம் புகுவது போல

அளவாச் சிறுசெவி அளப்பெரு நல்லறம்

உளமலி உவகையொடு உயிர்கொளப் புகும்”

மணிமேகலையின் பன்னிரண்டாம் காதையான அறவணர் தொழுத காதை சுருங்கைப் பற்றிக் குறிப்பிடுகின்றது. சுருங்கை என்பது பூமிக்கடியில் செல்லும் குழாய் அமைப்பாகும் (Saminathan, 2001). அது ஏரிகள் குளங்களில் தேக்கப்பட்ட நீரானது சுருங்கை வழியாக வெளியேறி மக்களுக்குப் பயன் தரும்.

கலிங்கு

நீர் வெளியேற்றக் கலிங்கு என்ற அமைப்பை ஏற்படுத்தியிருந்தனர். ஏரியின் கொள்ளளவினை நீர்மட்டத்தைக் கணக்கிட்டு இயற்கையாகவே பள்ளமாகவே உள்ள கரையின் ஒரு பகுதியில் அந்த உயர அளவில் வடிகால் அமைப்பை ஏற்படுத்தி அதன் மூலம் நீரை வெளியேற்றி வந்தனர். இந்நீர் வெளியேற ஒரு கால்வாய் ஏற்படுத்தி அடுத்த ஏரியிலோ அல்லது ஆற்றிலோ கலந்து விடும்படி செய்திருந்தனர். அதனால் நீர் வீணாவது தடுக்கப்படுவதோடு எவ்வளவு வெள்ளம் வந்தாலும் ஏரியின் கொள்ளளவை தாண்டிய நீர் இக்கலிங்கு வழியே வெளியேற்றப்படுவதால் ஏரியின் கரை

உடையெடுப்பதும் தடுக்கப் பெற்றது. இத்தகு தொழில் நுட்பம் நம் தமிழகத்தில் பல நூற்றாண்டுகளுக்கு முன்பிருந்தே பயன்பாட்டில் உள்ளது என அறிய முடிகின்றது.

நீர்த்தேக்கங்கள்

ஏரிகள் குளங்கள் போன்றவற்றை பற்றிய செய்திகள் இலக்கியங்களில் இடம்பெறுகின்றன. நீரைச் சேமித்து வைக்க கயம், இலஞ்சி, மடு, பொய்கை, குட்டம் போன்ற பல்வேறு பெயர்களில் காணப்படுகின்றது. மழை நீரானது தரையில் ஓடி ஆறுகளாகவும், அருவிகளாகவும் கடலில் கலக்கின்றது. மழை நீரினை ஆறுகளில் கலக்கும் முன்பே அதனைத் தடுத்து சேமித்து வைத்தனர். ஆறுகளுக்கு நடுவே அணைக்கட்டி அதன் வழியே ஒரு வாய்க்கால் வெட்டி கால்வாய்கள் மூலம் நீரினைப் பயன்படுத்தினர். கால்வாய்களின் வழியே வரும் நீரினை ஏரிகளில் நிரப்பி அதனை வேளாண்மைக்குப் பயன்படுத்தினர்.

"ஏரியும் ஏற்றத்தினாலும் பிறர் நாட்டு

வாரி சுரக்கும் வளன் எல்லாம் தேரின்"

என்ற அடிகளில் அறியலாம் (Saminathan, 2001).

முடிவுரை

பருவக்காலத்தில் பெய்யும் மழைநீரைத் தேக்கிப் பாசனம் செய்வது மிகவும் அவசியம். நீர்த்தேக்கத்திலிருந்து திரும்பி விடப்பட்ட நீரை ஏரி அணை கலிங்கு மடை மதகு முதலியவற்றின் மூலம் பாசன வயலை அடையும் வரை நீர் வீணாகாமல் தடுக்க உரிய முயற்சி மேற்கொள்ளப்பட்டுப் பாதுகாத்த முறையைத் தமிழர்கள் நீர் நிர்வாகத்திறன் வழியே தெரிகிறது. பழந்தமிழரின் நீர் பராமரிப்பு முறையை நாம் கையாண்டால் நீருக்காக அண்டை மாநிலங்களில் கையேந்தும் நிலை இருக்காது. பழந்தமிழரின் நிர்வாகத் திறனை கடைபிடித்து நீர்வளம் காத்து இயற்கையைப் பாதுகாப்போம்.

References

Elampuranar, (2004) Tholkappiyam Porulathigaram, Saratha Publication, Chennai, India.

Kumaravelan, R., (2003) Thirukural V.O. Chithambaram Urai, Parithi Publication, Chennai, India.

Saminathan, U.V., (2001) Paripadal Urai, Manivasagar Publication, Chennai, India.

Sampath, S., (2004) Neeir Meaillanmai, Kumaran Publication, Chennai, India.

Subramaniyan, S.V., (2007) Sanga Ellakiyam Ettu Thogai, Saratha Publication, Chennai, India.

Subramaniyan, S.V., (2010) Sanga Ellakiam Pathu Paattu, Manivaasagar Publication, Chennai, India.

Funding: No funding was received for conducting this study.

Conflict of Interest: The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

About the License:

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License